# கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி

## அறிக்கை

மாபெரும் தமிழ்க்கனவு ஒருங்கிணைப்பாளர் விவரம்
தூத்துக்குடி மாவட்டம்.

| வ.எண். | கல்லூரியின் பெயர் | ஒருங்கிணைப்பாளர் பெயர் மற்றும் பதவி | தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| 1. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி. | முனைவர்.கோ.சந்தன மாரியம்மாள், இணைப் பேராசிரியர், தமிழத்துறை. | 9791424967 | gsminiyan@gmail.com |
| 2. | கோ.வெங்கடசாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி. | முனைவர்.கம்.சங்கரேஸ்வரி உதவிப்பேராசிரியர், தமிழத்துறை. | 8637600847 | Sankariphd86@gmail.com |
| 3. | கோ.வெங்கடசாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி. (சுயநிதி கல்லூரி) | முனைவர்.சு.அனுசுயாதேவி, உதவிப்பேராசிரியர், தமிழத்துறை. | 9488068584 | anushoumik@gmail.com |
| 4. | கே.ஆர்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி. | பா.மணிசங்கர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை. | 9715292318 | manisankarphd@gmail.com |
| 5. | உண்ணாமலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி. | திருமதி.சா.பாரதி, உதவிப்பேராசிரியர், தமிழத்துறை. | 7010714998 | ucaskpt@gmail.com |
| 6. | எஸ்.எஸ்.துரைசாமி நாடார் மாரியம்மாள் கல்லூரி, கோவில்பட்டி.. | கோ.ராஜபிரியங்கா, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை. | 7449177680 | Priyankabalaji207@gmail.com |

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்-8

**கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி**

**அறிக்கை**

2023 – 2024 ஆம் கல்வியாண்டில் “மாபெரும் தமிழ்க்கனவு தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரைத் திட்டம்” கோவில்பட்டி கோ.வெங்கசுவாமி நாயுடு கல்லூரியில் 08.09.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.**கி.செந்தில்ராஜ்**, இ.ஆ.ப.,அவர்கள் தலைமையேற்று நோக்கவுரையும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.**பெ.கீதாஜீவன்** அவர்கள் முன்னிலையுரையும் மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு.**கனிமொழிகருணாநிதி** அவர்கள் **“நாமும் கல்வியும்”** என்ற தலைப்பில் மாணவர்களுக்கு சிறப்புரையும் ஆற்றினார்கள். இறுதியில் பொறுப்பு முதல்வர் முனைவர் **மூ.சுப்புலட்சுமி** அவர்கள் நன்றியுரை வழங்கினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மா.சங்கரேஸ்வரி மற்றும் முனைவர் சு.அனுசுயாதேவி ஆகிய இருவரும் ஒருங்கிணைப்பாளராக இருந்து இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



நிகழ்ச்சி நிரல்





## தூத்துக்குடி மாவட்டம்
## மாபெரும் தமிழ்க் கனவு
## தமிழ் மரபு (ம) பண்பாட்டுப் பரப்புரை

## நிகழ்ச்சிநிரல்

நாள் : 08.09.2023 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

இடம்: கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி.

தமிழ்த்தாய் வாழ்த்து
மாபெரும் தமிழ் கனவு காணொளி திரையிடுதல்
நினைவு பரிசு வழங்குதல்

| | |
|---|---|
| தலைமையேற்று நோக்கவுரை வழங்குதல் | மரு.**கி.செந்தில்ராஜ்**, இ.ஆ.ப.,அவர்கள்<br>மாவட்ட ஆட்சித்தலைவர் |
| முன்னிலையுரை | மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்<br>திருமதி.**பெ.கீதாஜீவன்** அவர்கள் |
| சிறப்பு விருந்தினர் (சொற்பொழிவாற்றி பரிசுகள் வழங்குதல்) | மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர்<br>திருமிகு.**கனிமொழிகருணாநிதி** அவர்கள் |
| நன்றியுரை | முனைவர் **மூ.சுப்புலட்சுமி** அவர்கள்<br>முதல்வர் (பொ)<br>கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி |

நாட்டுப்பண்:

தினகரன்
09.09.2023

## எல்லோருக்கும் கல்வி என்ற நிலைக்காக போராடியவர்கள்

# வரலாற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்

### கனிமொழி எம்பி பேச்சு



கோவில்பட்டி ஜிவிஎன் கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிக்கு கனிமொழி எம்பி பரிசு வழங்கினார். அருகில் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன்பெரியசாமி.

**கோவில்பட்டி, செப். 9:** எல்லோருக்கும் கல்வி என்ற நிலைக்காக போராடியவர்கள், வரலாற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கோவில்பட்டி ஜிவிஎன் கல்லூரியில் நடந்த விழாவில் கனிமொழி எம்பி பேசினார்.

மாபெரும் தமிழ்க் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி, கோவில்பட்டி ஜிவிஎன் கல்லூரியில் நடந்தது. மாவட்ட கலெக்டர் செந்தில்ராஜ் தலைமை வகித்தார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் சுப்புலட்சுமி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கனிமொழி எம்பி கலந்து கொண்டு மாணவ, மாணவிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசினார்.

அவர் பேசுகையில், ஒரு காலத்தில் மேட்டுக்குடி மக்களுக்கு மட்டும்தான் கல்வி என்ற நிலை இருந்தது. ஆனால் தமிழகத்தில் நம் முன்னோர்கள் கல்வி என்பது அனைவருக்கும் சமம் என்றனர். இதைத் தான் அவ்வையார், திருவள்ளுவர் தங்களது பாடல் வரிகள் மூலமாக கூறுகின்றனர். கல்வியை கொண்டாடிய மக்கள் வாழ்ந்த நாடுதான் தமிழகம் என்றும், தமிழகத்துக்கு 1292ல் மார்க்கோ போலோ வந்தபோது, தமிழர்களின் நாகரிகத்தையும், பண்பாடு, செல்வ செழிப்பு, பெண்கள் நகைகளை போட்டுக் கொண்டு இரவிலும் தனியாக சென்றதையும் எழுதியுள்ளார்.

அதையே 1610ல் மதுரைக்கு வந்த ராபர்ட் ரிநோபில் மனிதர்கள் கல்வி அறிவு இல்லாமல் இருந்ததையும், அடிமையாக வேலை செய்ததையும் குறிப்பிட்டு உள்ளார். அப்போது படித்தவர்கள் சமஸ்கிருதத்தை மட்டும் படிப்பதாக கூறுகிறார்கள்.

கீழடியில் பல்வேறு போராட்டத்திற்கு பின்னர் தான் அகழ்வாராய்ச்சி தொடரப்பட்டது. கீழடி அருங்காட்சியகம் நம்முடைய பெருமை. பாறைகளிலும், ஓடுகளிலும் 2 ஆயிரத்து 400 ஆண்டுக்கு முன் எழுதி இருக்கிறான். தமிழி என்ற நம்முடைய எழுத்து முறை கிடைத்துள்ளது. அப்போது, எல்லோருக்கும் கல்வி கிடைத்திருக்கிறது.

அதிகாரம் உள்ள அரசர்கள் காலத்தில் கல்வெட்டின் மூலம் அறிய முடியும். பானை ஓடுகளில் எழுத்து இருந்தது என்றால் அதிகாரமில்லாத அனைவருக்கும் கல்வி கிடைத்திருக்கிறது. கீழடி, கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை உள்ளிட்ட அகழ்வாராய்ச்சி இடங்களை நீங்கள் போய் பார்க்க வேண்டும்.

எல்லா உயிரினங்களும் வாழ வேண்டும். கல்வி என்பது எல்லோருக்குமானது என்று வாழ்ந்தவன் தமிழன், தமிழகம் மட்டும் எல்லாவற்றிலும் வித்தியாசமாக இருப்பதாக கேட்கின்றனர். தொன்மை தொட்டு நம்முடைய சிந்தனைகள் உலகசர்புடையது.

எல்லோருக்குமானதாக இருந்து கொண்டு இருக்கிறது. கல்வியில் சமூக நீதியை மீட்டு வந்திருக்கிறோம். காமராஜ் காலம் முதல் அதன்பின் வந்த ஒவ்வொரு அரசும் கல்வி பணியை செய்து இருக்கிறது. பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத் தான் தமிழக அரசு திருமண உதவித்தொகை திட்டத்தை கொண்டு வந்தது. தேசிய அளவில் உயர்கல்வியை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பதுதான் புதிய கல்விக் கொள்கை. ஆனால், நாம் 52 சதவீதத்தை தாண்டி சென்று கொண்டிருக்கிறோம். அதை தட்டி பறிக்க முயற்சிக்கிறார்கள். ஒரு காலத்தில் சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் மட்டும் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. பெண்கள் மருத்துவம் படிக்க முடியாத நிலை இருந்தது.

இதையெல்லாம் கல்விக்காக போராடி மாற்றப்பட்டு உள்ளது. இதற்காக போராடியவர்களின் வரலாறுகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்காகபோராட்டம் நடத்தியவர்கள், கண்ணீர் சிந்தியவர்கள், சிறைசென்றவர்களை தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் பாதுகாக்க முடியும். ஆண், பெண் பாகுபாடின்றி அன்பு நிறைந்த அழகாக உலகை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு கனிமொழி எம்பி பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி இயக்குநர் வெங்கடசாமி, செயலர் மகேந்திரன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, நகராட்சி சேர்மன் கருணாநிதி, யூனியன் சேர்மன் கஸ்தூரி சுப்புராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ரமேஷ், சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி

09.09.2023



கொல்லங்கிணறு கிராமத்தில் நடந்த மக்கள் களம் நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிக்கு கல்வி உதவித்தொகையை கனிமொழி எம்.பி. வழங்கியபோது எடுத்த படம். அருகில் கலெக்டர் செந்தில்ராஜ், சண்முகையா எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

### அனைத்து ஊராட்சிகளுக்கும் நேரில் சென்று

# கிராம மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகள் நிவர்த்தி செய்யப்படும்

## கனிமொழி எம்.பி. தகவல்

ஓட்டப்பிடாரம், செப்.9- தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் நேரில் சென்று கோரிக்கை மனுக்களை பெற்று குறைகள் நிவர்த்தி செய்து தரப்படும் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

### மக்கள் களம் நிகழ்ச்சி

ஓட்டப்பிடாரம் அருகே மருதன்வாழ்வு, கொல்லங்கிணறு, தென்னம்பட்டி, மலைப்பட்டி, சங்கம்பட்டி ஆகிய கிராமங்களில் மக்கள் களம் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் செந்தில்ராஜ் தலைமை தாங்கினார். எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கனிமொழி எம்.பி. 141 பயனாளிகளுக்கு ரூ.32 லட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டா மற்றும் கல்வி உதவித்தொகை, மாற்றுத் திறனாளி உதவித்தொகை ஆகிய நல திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து மருதன்வாழ்வு கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடை கட்டிடத்தை அவர் திறந்து வைத்தார்.

அப்போது கனிமொழி எம்.பி பேசுகையில்,

### வீடுகளுக்கு குடிநீர்

கள், நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிகள் நடைபெறுகிறது. மலைப்பட்டி ஊராட்சியில் ரூ.1.56 கோடி மதிப்பில் 37 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை

மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் மாவட்டத்தில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் சென்று கிராம மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல் கோரிக்கை இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டும் என்பது தான் எங்களது ஆசை. நீங்கள் தொடர்ச்சியாக கோரிக்கை வைக்கலாம். எங்களால் ஆன முயற்சிகள் செய்வோம், என்றார். தொடர்ந்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை அவர் வாங்கினார்.

### கலந்துகொண்டவர்கள்

இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன்பெரியசாமி, மாவட்ட ஊராட்சி தலைவர் பிரம்மசக்தி, கோவில்பட்டி உதவி கலெக்டர் ஜோன் கிறிஸ்டி பாய், ஓட்டப்பிடாரம் தாசில்தார் சுரேஷ்குமார், நாகராஜன், சமூகப் பாதுகாப்பு திட்ட தாசில்தார் செல்வகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோவில்பட்டி

பட்டி பஞ்சாயத்து யூனியன் தலைவர் கஸ்தூரி சுப்புராஜ், தி.மு.க. மாநில செயற்குழு உறுப்பினர் என்.ராதாகிருஷ்ணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர்.ரமேஷ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தினமலர்
09.09.2023

# அரசு அதிகாரம் இல்லாத காலத்திலும் தமிழர்களுக்கு கல்வி கிடைத்திருக்கிறது

## தூத்துக்குடி எம்.பி., பேச்சு

**கோவில்பட்டி, செப். 9–**

கோவில்பட்டி, ஜி.வி.என்., கல்லூரியில், மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில், தூத்துக்குடி எம்.பி., கனிமொழி கலந்து கொண்டார்.

கல்லூரி மாணவர்கள் மத்தியில் அவர், 'நாமும், கல்வியும்' என்ற தலைப்பில் பேசியதாவது:

கீழடி அருங்காட்சியகம் நம்முடைய பெருமை. பாறைகளிலும், ஓடுகளிலும் 2

ளில் எழுத்து இருந்தது என்றால், அதிகாரமில்லாத அனைவருக்கும் கல்வி கிடைத்திருக்கிறது. கல்வியில் சமூக நீதியை மீட்டு வந்திருக்கிறோம். காமராஜர் காலம் முதல் அதன் பின் வந்த ஒவ்வொரு அரசும் கல்வி பணியை செய்து இருக்கிறது. தேசிய அளவில் உயர் கல்வியை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பது தான் புதிய கல்விக் கொள்கை. ஆனால், நாம் 52 சதவீதத்தை தாண்டி சென்று